www.freetnbooks.com

V11Zoo

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

-----

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் விலங்கியல் மொத்த மதிப்பெண்கள்: 70

பகுதி - I

குறிப்பு: **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **15×1=15**

**கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) தரத்தைப் பற்றி கருதாமல் வகைப்பாட்டின் ஒவ்வொரு அலகு ............ ஆகும்.
அ) வகை ஆ) ஸ்ட்ரெயின் இ) டாக்ஸான் ஈ) சிற்றினம்

2) **சரியான இணையைத் தேர்ந்தெடுத்துப் பொருத்துக:**

| வரிசை I | | வரிசை II |
|---|---|---|
| A) நத்தை | - | i) பேய்மீன் |
| B) டென்டாலியம் | - | ii) கைடான் |
| C) கீட்டோபிளூரா | - | iii) ஆப்பிள் நத்தை |
| D) ஆக்டோபஸ் | - | iv) தந்த ஓடு |

அ) A-iii, B-iv, C-ii, D-i ஆ) A-ii, B-i, C-iii, D-iv
இ) A-ii, B-iv, C-iii, D-i ஈ) A-i, B-ii, C-iii, D-iv

3) இறந்த உடலை வெட்டி எடுத்து உடற்கூறுகளை ஆராய்ந்து கண்டறியும் முறை ............ ஆகும்.
அ) பயாப்சி ஆ) ஆட்டாப்சி இ) ELISA ஈ) இதில் எதுவும் இல்லை

4) கீழ்வருவனவற்றுள் கரப்பான்பூச்சியின் உணர்வு உறுப்பு எது?
அ) உணர் நீட்சிகள், கண்கள், மேல்தாடை நீட்சிகள் மற்றும் நடக்கும் கால்களின் டார்ஸஸ் பகுதி மற்றும் காக்சா.
ஆ) உணர் நீட்சிகள், ஓம்மட்டிடியா, மேல்தாடை நீட்சிகள், ஸ்டெர்னம் மற்றும் மலப்புழை நீட்சி.
இ) உணர் நீட்சிகள், கூட்டுக்கண்கள், மேல்தாடை நீட்சிகள் மற்றும் டெக்மினா.
ஈ) உணர் நீட்சிகள், கூட்டுக்கண்கள், மேல்தாடை நீட்சிகள் மற்றும் மலப்புழை தண்டுகள்.

5) லாம்பிட்டோ மாரிட்டீ மண்புழுவின் சிறப்புப் பகுதியான கிளைடெல்லம் காணப்படுவது
அ) 14 முதல் 17 வரை உள்ள கண்டங்களில்
ஆ) 13 முதல் 18 வரை உள்ள கண்டங்களில்
இ) 12 முதல் 13 வரை உள்ள கண்டங்களில்
ஈ) 14 முதல் 16 வரை உள்ள கண்டங்களில்

6) **கீழ்வருவனவற்றுள் பொருந்தாதது எது?**

| வரிசை I | | வரிசை II |
|---|---|---|
| அ) ஸ்டார்ச்சை நீராற்பகுத்தல் | - | அமைலேஸ்கள் |
| ஆ) உமிழ்நீர் சுரப்பி | - | பரோடிட் |
| இ) கொழுப்பு செரித்தல் | - | லிபேஸ்கள் |
| ஈ) பிலிரூபின் மற்றும் பிலிவிரிடின் | - | சிறுகுடல் நீர் |

7) நீண்ட ஆழ்ந்த மூச்சுக்குப்பின் சில வினாடிகள் நாம் காற்றை சுவாசிப்பதில்லை. இதற்கு காரணம்
அ) இரத்தத்தில் அதிக $CO_2$ இருப்பதால்
ஆ) இரத்தத்தில் குறைவான $CO_2$ இருப்பதால்
இ) இரத்தத்தில் அதிக $O_2$ இருப்பதால்
ஈ) இரத்தத்தில் குறைவான $O_2$ இருப்பதால்

8) புகைபிடிப்பதால் தோன்றும் நாள்பட்ட சுவாசகோளாறு
அ) ஆஸ்துமா ஆ) எம்ஃபைசீமா இ) சுவாச அமில நோய் ஈ) சுவாச காசநோய்

9) இரத்தம் பற்றிய சரியான கூற்று எது?
அ) இரத்தத் தட்டுக்கள் சிவப்பணுக்களைவிட குறைவு.
ஆ) சிவப்பணுக்கள் இரத்தத் தட்டுக்களைவிட குறைவு.
இ) சிவப்பணுக்கள் வெள்ளையணுக்களைவிட அதிகம்.
ஈ) வெள்ளையணுக்கள் சிவப்பணுக்களைவிட அதிகம்.

10) ஒரு நோயாளியின் இதயத்திலிருந்து வெளியேற்றப்படும் இரத்த அளவு 7500 மி.லி/நிமிடம். வீச்சுக்கொள்ளளவு 50 மி.லி எனில் அவரது நாடித்துடிப்பு வீதம் எவ்வளவு? (in beats / min)
அ) 400 ஆ) 150 இ) 50 ஈ) 100

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



11) யூரியா சுழற்சி நடைபெறும் உடல் உறுப்பு எது?
அ) சிறுநீரகம் ஆ) கல்லீரல் இ) இதயம் ஈ) மூளை

12) மல்பிஜியின் நுண்குழல்கள் எதிலுள்ள கழிவுப்பொருட்களை வெளியேற்றுகின்றன?
அ) ஹீமோலிம்ப் ஆ) உணவுப்பாதை இ) உணவுக்குழல் ஈ) வாய்

13) முழங்கையின் கூர்மைப் பகுதி
அ) ஏகுரோமியான் நீட்சி ஆ) கிளிநாய்டு குழி
இ) ஒலிக்கிரானின் நீட்சி ஈ) இணைவு

14) **சரியான இணையைத் தேர்ந்தெடுக்க:**
அ) இயக்க நரம்பு - உட்செல்லுதல்
ஆ) உணர்வு நரம்பு - வயிற்றுப்புறம்
இ) இயக்கு நரம்பு - முதுகுப்புறம்
ஈ) உணர்வு நரம்பு - உட்செல்லுதல்

15) வளர்ச்சி ஹார்மோன் மிகை சுரப்பில் குழந்தைகளுக்குத் தோன்றுவது
அ) இராட்சத தன்மை ஆ) குள்ளத்தன்மை இ) கிரிடினிசம் ஈ) டெட்டனி

## பகுதி - II

**குறிப்பு: எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 6×2=12**
**வினா எண் 24 கட்டாய வினா.**

16) மூடிய மற்றும் திறந்த வகை இரத்த ஓட்ட மண்டலத்தை ஒப்பிடுக.
17) ஆண் தவளை, பெண் தவளை - வேறுபடுத்துக.
18) கல்லீரலின் இதரப்பணிகள் இரண்டினை எழுதுக.
19) இதய ஒலிகள் ஒன்றால் என்ன? அவை எப்போது மற்றும் எப்படி உண்டாக்கப்படுகின்றன?
20) பிசியோதெரபி என்றால் என்ன?
21) மிதக்கும் விலா எலும்புகள் என்றால் என்ன?
22) குருட்டுப்புள்ளி எனப்படுவது எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?
23) உடல் சமநிலைப் பேணுதல் என்றால் என்ன?
24) கோலிசிஸ்டோகைனின் பணிகளைக் குறிப்பிடுக.

## பகுதி - III

**குறிப்பு: எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 6×3=18**
**வினா எண் 33க்கு கட்டாயமாக விடையளி.**

25) விலங்கு காட்சி சாலைக்கும் வனவிலங்கு சரணாலயத்திற்கும் உள்ள வேறுபாடு யாது?
26) வெள்ளை அடிப்போஸ் திசுவைப் பழுப்பு அடிப்போஸ் திசுவிலிருந்து வேறுபடுத்துக.
27) நிமோனியா ஏன் ஒரு ஆபத்தான நோயாகக் கருதப்படுகிறது?
28) "RAAS" என்றால் என்ன?
29) மூளையில் காணப்படும் கதுப்புகளின் பெயர்களை எழுதி அதன் பணிகளை குறிப்பிடுக.
30) மீஸ்னரின் துகள்கள் என்றால் என்ன?
31) அண்ட உருவாக்கத்தில் ஈஸ்ட்ரோஜன் பங்கைக் குறிப்பிடுக.
32) அக்ரோமெகலியின் அறிகுறிகளை எழுதுக.
33) மனித கண்ணின் குறுக்குவெட்டுத் தோற்றத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறி.

## பகுதி - IV

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5×5=25**

34) முதுகுநாணுடைய மற்றும் முதுகுநாணற்ற விலங்குகளின் பண்புகளை ஒப்பிடுக.
**(அல்லது)**
எபிதீலியம் என்றால் என்ன? அதன் பல்வேறு வகைகளின் பண்புகளைக் கூறுக.

35) தவளையின் பெண் இனப்பெருக்க மண்டலத்தைப் படத்துடன் விவரி.
**(அல்லது)**
உணவூட்ட மற்றும் செரிமானக் குறைபாடுகள் ஏதேனும் மூன்றினைப் பற்றி விவரி.

36) எந்த நிலையில் ஆக்ஸிஜன் கடத்துதலில் சிக்கல்கள் ஏற்படுகிறது என்பதை விவரி.
**(அல்லது)**
தமனி, சிரை வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

37) தொடர் உடற்பயிற்சி செய்வதால் ஏற்படும் நன்மைகளை எழுதுக.
**(அல்லது)**
கூம்பு செல்கள், குச்சி செல்கள் வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

38) அட்ரினலின் ஹார்மோன் பணிகளை விவாதி.
**(அல்லது)**
இரத்த ஊடுபகுப்பு என்றால் என்ன? அதன் செயல்முறையைப் படத்துடன் விவரி.

----------

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner